*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# சங்கஇலக்கியத்தில் அரசும் அரசரும்

**சி.யுவராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

*சங்க இலக்கியங்களின் மூலமாகப் பண்டைத்தமிழர்களின் நனிநாகரிகம், தொன்மை, பெருமை முதலியவற்றையும் காலத்தில் கருவூலங்களகத் திகழ்கின்றன. இவ்விலக்கியங்களில் காதலும் வீரமமும் முதன்மைபெற்றது. இவ்விரண்டைப்பற்றிக் கூறும் பாடல்களில் அரசின் பெருமையும் அரசரின் தன்மையும் நாட்டின் சிறப்பும் அவையில் தினந்தோறும் நடத்தேறும் நிகழ்ச்சியும் பற்றிய செய்திகளை அறிவிக்கும் செயலாகக் கொண்ட இக்கட்டுரையின் நோக்கமாகவே அமைகிறது.*

**அரசுரிமை**

அரசுமுறை என்பது எளிதன்று அரசுரிமை வாரிசு அடிப்படையில் அமையும். தந்தைக்குப் பிறகு மகன் என்ற முறையில் உரிமை தொடரும். அதிலும் மூத்தோர்க்கே பிறகு வரும் இளையோருக்கு உரிமை உண்டு. விதி தரப்பட்டுத் தம்பால் வந்த பழைய வெற்றியாண்டாகிய அரசுரிமை. இதனை,

**மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்**
**பாறர வந்த பழவிறற் றாயம் (புறம்.75:1-2)**

என பாடல் வரிகளின் மூலமாக நலங்கிள்ளி கூறுவதில் உரிமையைக் காணமுடிகிறது.

**அரண்மனை**

அரசர்கள் மிகப்பெரிய அரண்மனைகளின் வாழ்ந்துள்ளனர். இம்மனை பாதுகாப்பு மிகுந்த அரண்களால் சூழப்பட்டமையால் அரண்மனை எனப்பட்டது. இதனைக் ‘கோயில் சங்க இலக்கியங்களில் சுட்டும். அரண்மனைகள் பரந்தகன்ற இடப்பரப்பில் உயர்ந்த மாடங்களோடு கட்டப்பட்டனவாகும். இவை எழுநிலை மடங்கள் கொண்டன. அரண்மனைகளில் மிகப்பெரிய வாயில்கள் உண்டு. அவை யானை மீது அமர்ந்து கொடியை உயர்த்திக்கொண்டு செல்லும் அளவிற்கு உயரமுடையன என்பதை,

**வேன்றெழு கொடியோடு வேழந் சென்றுபுகக்**
**குன்றுகுயின் றன்ன ஓங்குநலை வாயில் (நெடுநல்.87-88)**

இவ்வரிகளில் மூலமாக நக்கீரர் விளக்குகின்றார்.

அரண்மனைகளில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கும். இதனை,

**ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர் (பதிற்று.88:8)**

மேலும்,

**ஓவத் தன்ன விடனுடை வரைப்பின் (புறம்.251:1)**

எனவும் கூறுவர். அரண்மனைகள் காவல் பொருந்தியன. அவற்றின் வாயிலில் காவலர் எப்பொழுதும் நிற்பர். இங்கு அரசனுக்கென்று தனிமனையும் அவன் தேவிக்குத்தனிமையும் அமைந்திருக்கும். அரசி வாழும் பகுதி ஆடவர் புகவியலாதக் காவலையுடையது. இங்கு யவனர் முதலான வேற்று மொழி பேசும் மக்கள் பணியாளர் அமர்த்தப்படுவர்.

அரண்மனைகளின் அரசர்களைச் சுற்றிலும் புலவரும் கலைஞரும் எப்பொழுது சூழ்ந்திருப்பார்கள். அரசரைப் பாடியும் ஆடியும் மகிழ்விப்பர். அரசர்கள்

அவர்களுக்குப் பல்வேறு பரிசில்களை வரையாது வழங்குவர். அரசவையில் அமைச்சரும் சுற்றித்தினரும் நல்லாட்சி உதவுவர். அரசர்கள் அரசவையில் இருந்து நாட்டினை நல்லாட்சி புரிவர். நீதி வழுவாது ஒழுகுவர்.

**துயிலெடை நிலை**

அரசர்கள் வைகறையில் சூதர் பாட துயில் எழுதல் நடைமுறையில். இதனைத் தொல்காப்பியர்,

**தூவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயில்எடை நிலை (தொல்.பொருள்.புறம்.நூ.30:1-2)**

என்பர். நச்சினார்க்கினியர், கிடந்தோர்க்கு எனப்பன்மை கூறவே, அவர் துயிலெடுப்புத் தொன்றுதொட்டு வரும் என்பதூஉம், சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலாயினோருட் சூதரே இங்ஙனம் வீரத்தால் துயினறாரைத் துயில் எடுப்புவர் என்பதூஉம் யாண்டும் முன்னுள்ளோரையும் பிறரையும் கூறப்படும் என்பதூஉம் கொள்க என விளக்குவர். இவற்றால் அரசர்களைத் துயிலெடுப்புதல் தொன்றுதொட்டுவரும் நடைமுறை வாழ்க்கை நிகழ்வு என்பது புலனாகும்.

“வைகறையில் அரசன் முனையுள் முரசு ஒலிக்கும். அது ‘பள்ளியெழுச்சி முரசும்’ எனப்படும் என்பர் மா. இராசமாணிக்கனார். அப்பொழுது சூதர் அரசனை நின்றேத்துவர்: மாகதர் இருந்தேத்துவர்; வைதாளிகர் இசைக்கருவிகளை இயக்குவர்; நாழிகைக் கணக்கர் நேரத்தை அறிவிப்பர். இந்நடைமுறைகளை மாங்குடி மருதனார்,

**சூதர் வாழ்த்த மாகதர் நுவல**
**வேதா ளிகரொடு நாழிசை இசைப்ப**
**இமிழ்முர வாரணம் வைகறை இயம்ப (மதுரை.670-673)**

ஏனப் பாண்டிய நெடுஞ்செழியன் துயில் எழுவதைப் பாடுவதில் எடுத்துரைப்பர்.

ஆலத்தூர் கிழார் சோழன் நலங்கிள்ளியின் அரண்மனையில் பள்ளியெழுச்சிக் காலத்தில் வலம்புரிச் சங்கம முழங்குவதை எடுத்துரைப்பர். இதனை,

**…………… திரிவாய் வலம்புரி**
**ஞாலங் காவலர் கடைத்தலைக்**
**காலைத் தோன்றினு நோகோ யானே**
**(புறம்.225:12-14)**

என்பர். “பள்ளியெழுச்சிக் காலத்தே வேந்தர் மனை முன்றிலில் வலம்புரி முழக்குவது மரபு” என்னும் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளையின் கருத்தும் இதனை விளக்கும்.

அரசர்கள் அரண்மனைகளில் இருக்கும் பொழுது நிகழும் இம்மரபு பாசறையில் இருக்கும் பொழுதும் பின்பற்றப்படும். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பாசறையில் தங்கியிருக்கும் பொழுது, வலம்புரியுடன் முரசமும் ஒலிக்கத் துயில் எழுவான். இதனை,

**இரங்குரன் முரசமொடு வலம்புரி யாப்ப**
**இரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி**
**எ஁கிரு கைற்று மேம் பாசறையில் (புறம்.397:5-7)**

என எருக்காட்டூர் தாயங்கண்ணனார் தம் பாடல்களின் வழியாக அறியசெய்கிறார். பாசறையில், வலம் புரியுடன் முரசும் ஆர்ப்பது நடைமுறையாகும். இம்மரபு பிற்காலத்தில் துயிலெடை நிலை என்னும் சிற்றிலக்கியமாக வளர்ச்சிப் பெற்றுது. பாட்டியல் இலக்கணங்களுள் பன்னிரு பாட்டியலும் பிரபந்த தீபிகையும் துயிலெடை நிலை என்னும் இலக்கிய வகையை விளக்கும். இவை அரசனைத்துயில் எழுப்பதலையே இலக்கிய பொருண்மையாக்கக் கூறும்.

**அவையம்**

அரசர்கள் தினமும் அவைக்கு வருதலை நடைமுறையாக்கிக்கொண்டு அரசர்களது அவையின் தன்மையைத் தொல்காப்பியர்,

**எட்டுவகை நுதலிய அவையகம்**

என்பர். இது எட்டுப் பாகுபாட்டுடன் கூடிய அவை என்ற பொருள் தரும். அவ்வெட்டு வகை எவை எனத்தொல்காப்பியத்தில் இளம்பூரணர், ‘ குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை’ என்ற எட்டு வகையில் சிறப்புப் பெற்ற அவை என விளக்குவர். அரசர்கள் நாள்தோறும் அரசவையில் இருந்து செங்கோல் செலுத்தி முறை செய்தலை,

**முறையுடை யரசர் செங்கோ லவைத்து (குறுந்.276:5)**

கூழக்கொற்றன் வரிகளின் சொல்லப்படுகிறார். ஓர் அரசன் அவையில் இருத்தலே சிறப்பு வாய்ந்ததாகும். மூவேந்தரும் ஓர் அவையில் ஒருங்கு இருந்தால் அந்த அவை எவ்வளவு சிறப்புடையது என்பதை,

**முரசுமுழங்கு தானை மூவருங் கூடி**
**அரசவை யிருந்த தோற்றம் போல (பொரு.54-55)**

என மூடத்தாமக்கண்ணியார் குறிப்பிடுவர். சேரமான் மாவண்கோவும், பாண்டியன்

கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருத்தபோது ஔவையார் அவர்களை வாழ்த்திப் பாடுவர். அதில் அவர்களது நடைமுறை வாழ்க்கையை எடுத்துரைப்பர். இளந்திரையன் உரும்பில் சுற்றத்தோடு அரசவையில் வீற்றிருந்து ஆற்றிய செயலை,

**முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்**
**வேண்டுப வேண்டுப வெண்டுநர்க் கருளி**
**இடைதெரிந் துணரும் இருடீர் காட்சிக்**
**கோடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்து**
**உரும்பில் சுற்றமோ டிருந்தோன் (பெரும்பாண்.443-447)**

என்பர். இதில் அரசையில் நாளும் நிகழும் செயற்பாடுகள் நன்கு விளங்கும். மக்கள் குறை தீர்த்தல், முறை வழங்குதல், கொடைக்கடன் இறுத்தல் என்பன அச்செயற்பாடுகளாகும்.

குறுநில மன்னருக்கும் தனி அவை உண்டு. தம் சுற்றம் சூழ அரசவையில் இருப்பர். கோசர் அவையினை,

**வலம்புரி கோச ரவைக்களத் தானும் (புறம்.283:6)**

அண்டர் நடுங்கல்லினர் பாடலின் மூலமாக அறியலாம். கோசர் அம்பலத்தில் அவையைக் கூட்டுவர். இதனை,

**தொண்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய**
**நாலூர்க் கோசர் (குறுந்.5:2-3)**

என்பர். பலர் கூடியிருத்தற்கேற்ற கிளைப்பரப்பும் நிழலுமுடைய ஆலமரத்தடியில் இப்பொழுதியில் அமையும்.

**நீதி வழங்குதல் (முறை வழங்கல்)**

முறை வழங்கல் என்பது நீதியை வழங்குதலர். மன்னன் குடிமக்களுக்கு சரியான முறையில் முறை வழங்குதல் அரசவையில் தினந்தோறும் நடந்தேறிய வண்ணமாக நிகழ்ந்துள்ளது.

சோழன் நெய்தலங்கானல் இயஞ்சேட்சென்னியின் இயல்பினை விளக:கும் ஊன்பொதி பசுங்குடையோர். சோழன் முறை வழங்குதலைக் கூறுவர். தோழன் மெய்யாக மனத்தான் ஆராய்ந்து பார்க்கும் இயல்பினன். ஒருவனிடம் அறுதியிடப்பட்ட செய்வான் என்பர்.

சோழன் நலங்கிள்ளி அரண்மனையில் முரசு இனிதாக ஒலிக்கத் தீயோரைத் தண்டித்தலும் நடுவு நிலையோர்க்கு அருள் செய்தலுமாகிய முறைமையில் சோம்புதல் இல்லதாவனாக இருப்பான். இதனை,

**கொடிபோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலும்**
**ஒடியா முறையின் மடிவிலை யாகி (குறுந்.29.9-10)**

என்பர். சோழன் குளமுற்றத்துத துஞ்சிய கிள்ளி வளவனுக்குச் செவியறிவுத்தும் வெள்ளைக்குடி நாகனார்,

**அநம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து**
**முறைவேண்டு பொழுதிற் பதனெளி போர (புறம்.35.14-15)**

என்று அரசனுக்கு வேண்டியப பண்பாக உணர்த்துவர். அறக் கடவுள் போன்று ஆராய்ந்து செங்கோல் செலுத்து தலையும், முறை செய்யும்பொழுது செவ்வி எளியோனாக இருத்தலையும் குறிப்பிடுவர். இவன் உறையூர் அவையில் அறம் நின்று நிலைபெறுமாறு முறை செய்தலை மாறோக்கத்து நப்பலையாரும் கூறுவர்.

அரசர் தனக்கு வெணடியவர் என்று ஒருவன் செய்த கொடுந்தொழிலைப் பொறுத்துக்கோல் வளைதல் கூடாது. இவன் தனக்கு அயலோர் என்று அவனது நற்குணங்களை மறத்தல் கூடாது என பாண்டியர் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனுக்கு மதுரை மருதனிளநாகனார்.

**அறநெறி முதற்றே யரசின் கொற்றம்**
**அதானல் நமரெனக் கோர்கோ டாது**
**பிறரெனக் குணங்கொல் லாது**
**. . . . . . . . . . . . . . . .**
**நீடு வாழிய**
**(புறம்.55:10-17)**

என அறிவுறுத்துவர்.ஒல்லையூர் தந்த பூதப்பாண்டினின் வஞ்சினம் முறை வழங்குதலின் இன்றியமையாமையை உணர்த்தும். அவையில் அறம் சிலை கலங்க அறத் திறப்பாடில்லாத ஒருவனை வைத்து முறை கலங்கிக் கொடுங்கோல் செய்தல இகழுதற்குரிய செயலாகக் கூறுவர்.

**அறநிலை திரியா வன்பி னவையத்துத்**
**திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து**
**மெலிகோல் செய்தே னாகுக (புறம்.71:7-9)**

என்பது பாண்டியனின் வஞ்சினமாகும்.

**திறைபெறுதல்**

போரில் ஈடுபட்டு இழப்பு ஏற்படுவதை விரும்பாதவர்கள் அருங்கலங்களைத் தந்து பகையைக் குறைத்துக் கொள்வர் இவ்வாறு பெறப்படுவது திறை எனப்படும் வேந்தருக்குக் கீழுள்ளங்கள் மன்னர்கள் வேறு கலன்களை வழங்கி வணங்கிச் செல்வர்.

பாண்டியன் நெடுஞ்செழியனுக்குச் சிற்றரசர்கள் நாள்தோறும் செலவம் மிகும்படி அவனைக் கையால் தொழுது வாழ்த்து நாட்காலத்தே சீரிய கலங்களைத் திறையாகக் கொடுப்பர். இதனை,

**நாயொறும் விளங்கக் கைதொழுஉப் பழிச்சி**
**நாடர வந்த விழுக்கலம்**
**(மதுரைக்காஞ்சி.694-695)**

என்பர். பகைவர் அரசனுக்குத் தாம் கொடுக்க வேண்டிய திறையைக் கொடுத்து அவனுக்குச சுற்றிமாய செய்தியை,

. . . . . . . . . . . . . . . **பகைவரும்**
**தந்திறை கொடுத்துத் தமரா யினர்**
**(அகம்.44:1-2)**

என்பர் குடவாயிற் கீருத்தனார்.

**முடிவுரை**

சங்க இலக்கியக்கூறும் அரசர்கள் பற்றி செய்திகள். அக்காலத்தில் வாழ்ந்த அரசர்கள் நீதியையும் நிதியையும் மக்களுக்கு மட்டுமே முழுமையாப் பணியாற்றிய பெருமையைக் காணமுடிகிறது. அரசர் மிகப்பெரிய அரண்மனைகளில் வாழ்வதும், அதிகாலையில் வரம்புரியும் முரசும் முதலானவை முழுங்கும் செயலில் தன் மக்களின் சிறந்தப்பணியாற்றியும் உந்துதல் காட்டுகிறது. அவையின் பெருமைகளும் நடந்தேறும் சிறப்புகளும் அமைச்சரர்களின் பெருமையும் புலவர்களின் புலமையும் அவையில் அறிவுறுத்தப்படுவது உணரமுடிகிறது. வரிகளில் முறையில் மக்களுக்கு உழைப்பின் கடுமைக்கு கடுகளவு காட்டும் வரியைச்செலுத்தி வந்தனர். இக்கட்டுரையில் நோக்கமாக சங்ககால அரசர்களின் பெருமைகளை எடுத்துரைப்பதேயாகும்.

**குறிப்பு நூல்கள்:**

1. சோமசுந்தனார்,பொ.வே. - பத்துப்பாட்டு
2. மாணிக்கனார்,அ. - எட்டுத்தொகை
3. தொல்காப்பியம் - தொல்காப்பியர்